(ஆ) ஆம் எனில் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திட்டப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றல்.

*9258—திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த விளையாட்டு மைதானத்தை ரயில்வே நிலையமாக மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதால் நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த நேப்பியர் பூங்காவின் (மேதின பூங்கா) எதிரில் அமைந்திருந்த விளையாட்டு மைதானம் சென்னை நகர விரைவு இரயில் போக்குவரத்திற்கு தேவைப்பட்டதால் 1987-ல் தென்னக ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சமயத்தில் விளையாட்டு மைதானத்திலிருந்து பளுதூக்கும் மற்றும் விளையாட்டு கருவிகள் அனைத்தும் நேப்பியர் பூங்காவின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் நன்கு உயரமாக வளர்ந்துள்ள அசோகா, அரச மரம் போன்ற நிழல்தரும் மரங்கள் பூங்கா முழுவதும் பரவலாக உள்ளன. இப்பகுதியில் வேறு திறந்த வெளிப்பகுதி இல்லை. இப்பகுதிவாழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்பட்டு வரும் நேப்பியர் பூங்காவினை விளையாட்டு மைதானமாக்க வேண்டிய அவசியமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS